
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1095**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

**146**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த திருவண்ணாமலை எஸ்.முருகையன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# திருவண்ணாமலை எஸ்.முருகையன்

## சமூகநீதி அரசியல் வழிகாட்டி!




மெலிந்த தேகம், தன்னடக்கமான பண்பு, கொள்கை உரம் ஆகியவற்றின் அடையாளம், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலை முருகையன். கழகத் தோழர்களிடம் லட்சியத்தையும், கொள்கை பிணைப்பையும் வளர்த்தெடுத்து, அன்றைய ஒருங்கிணைந்த வடஆற்காடு மாவட்டத்தில், கழகத்தை வளர்த்த ஆற்றல்மிகு உடன்பிறப்பு. பேரறிஞர் அண்ணாவிடம் பாசப்பிணைப்பு கொண்ட தம்பி, கலைஞரின் ஆற்றல்மிகு நண்பர்.

நீதிக்கட்சி காலகட்டத்திலேயே வடஆற்காடு மாவட்டத்தில், பெரியாரை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியவர். பின்னர், திராவிடர் கழகத்தில் வடஆற்காடு மாவட்டத் தலைவராகவும் செயல்பட்டவர். திராவிட முன்னேற்றக் கழகம் உதித்தபோது, மாவட்டக் கழகத்தின் செயலாளராகவும் செயல்பட்ட சமூகநீதி அரசியல் வழிகாட்டி.

அன்றைய வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் 1920-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் சுப்ரமணியன் - வள்ளியம்மாள்.

திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பின்போதே தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், உருது, இந்தி ஆகிய மொழிகளையும் சரளமாகப் பேசக்கூடிய மொழிப்புலமையும் பெற்றவராக வளர்ந்தார். கூடவே, சுயமரியாதை இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, பள்ளியில் சுயமரியாதைக் கருத்துகளைப் பேசவும் தொடங்கினார்.

### ஆயுட்கால உறுப்பினர்

பள்ளிப் படிப்பிக்குப் பின்னர், கொள்கை ஈடுபாடு காரணமாக, 1939-ஆம் ஆண்டு நீதிக்கட்சியில் இணைந்து செயல்படலானார். 1944-ஆம் ஆண்டில் திராவிடர் கழகத்தில் இணைந்து, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுக் கருத்துகளையும், சமூக சீர்திருத்தக் கருத்துகளையும் பரப்புவதில், முன்னின்று செயல்பட்டார்.

நீதிக்கட்சி பின்னாளில், திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் கண்டபோது முன்னிலும் தீவிரமாக வடஆற்காடு மாவட்டப் பகுதிகளில் களப்பணி ஆற்றினார். பேரறிஞர் அண்ணாவுடன் பெரும் நட்பு கொண்டிருந்த முருகையன், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் ஆயுள்கால உறுப்பினராக இணைந்தார்.

கழகச் செயலாளராக செயலபட்டவர், பின்னாட்களில் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது திருவண்ணா மலை மாவட்டக் கழகத்தின் செயலாளராகச் செயல்பட்டார்.

கழகத்தின் கொள்கை வீரராக, பேரறிஞர் அண்ணாவின் உற்றத் தம்பியாக, எண்ணற்ற கழகத் தோழர்களின் அன்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். கழகம் அறிவித்த அனைத்து நடவடிக்கைகள், போராட்டங்களிலும் முன்னணி வீரராக களம் கண்டவர் முருகையன். 1962-ஆம் ஆண்டில் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, பேரறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்.

### தொடர் தேர்தல் வெற்றிகள்

1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தல் களத்தைச் சந்தித்தபோது, வெற்றி தோல்விக்குத் தயங்காமல் கழகத்தினர் களம் இறங்கினர். துரிஞ்சாபுரம் தொகுதியில் களம் இறங்கி, தோல்வியைத் தழுவினார் முருகையன். எனினும், அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற 15 உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் வடஆற்காடு மாவட்டத்தில் இருந்து சென்றவர்கள் என்பதுதான், முருகையன் போன்றோரின் களப்பணிக்குச் சான்றாக அமைந்தது. மீண்டும் 1962-ஆம் ஆண்டு தேர்தலின்போது துரிஞ்சாபுரம் தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில், திருப்புமுனையாக அமைந்த 1967-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, கலசப்பாக்கம் தொகுதியில் வென்றுவரப் பணித்தார் பேரறிஞர் அண்ணா. அவரது வார்த்தையைத் தட்டாத தம்பியாக, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வென்று சட்டமன்றத்திற்குள் நுழைந்தார். மீண்டும் அதே தொகுதியில் 1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வென்று வந்தவர். அந்த அளவுக்கு மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றவராக இருந்தார். 1980-ஆம் ஆண்டில், திருப்பத்தூர் மக்களவைத் தொகுதியிலில் நிறுத்தினார் கழகத் தலைவர் கலைஞர். அங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் வெற்றிபெற்று, மக்கள் மத்தியில் தனக்கிருந்த நன்மதிப்பை வெளிக்கொண்டு வந்தவர். அந்த அளவுக்கு மக்களுடன் நெருங்கிப் பழகியவராகத் திகழ்ந்தவர்.

1955-ஆம் ஆண்டில், இவர் திருவண்ணாமலை நகர மன்றத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டபோது நகர்மன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு, எளிதில் அறிமுகமாகும் சின்னமான மோட்டார் சைக்கிள் சின்னத்தை தேர்வுசெய்ய கூறியதால், அனைவரும் அச்சின்னத்தைப் பெற்றனர். அன்றைய காலகட்டத்தில் மோட்டார் சைக்கிள் சின்னம் அனைவரையும் கவர்ந்த சின்னமாக இருந்தது. அவர் நினைத்ததுபோலவே, அவருடன் இணைந்து போட்டியிட்ட அனைத்து உடன்பிறப்புகளும் வெற்றி பெற்றனர். அதன்மூலம் அனைவரும் ஒரே சின்னத்தில் நின்று வெற்றி பெறுவது என்கிற தேர்தல் அனுபவத்தைப் பெறுவதற்கு அது வாய்ப்பாக அமைந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் 1986-ஆம் ஆண்டு திருவண்ணாமலை நகர் மன்றத்துக்கு தேர்வானபோது, 1991 வரை திருவண்ணாமலை நகர மன்றத்தின் தலைவராக செயல்பட்டார். அன்றிலிருந்து இன்று வரைக்கும், 'திருவண்ணாமலை நகரத் தந்தை' என்கிற அழியாத அடையாளம் கொண்டுள்ளவர், முருகையன் அவர்கள் மட்டும்தான் என்கின்றனர் கழகத்தினர்.

கழகத்தின் அனைத்து மட்டத்திலும் செயல்பட்டவர் முருகையன், மாவட்டச் செயலாளர், மத்திய செயற்குழு உறுப்பினர். 1955-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரை திருவண்ணாமலை நகராட்சி மன்ற உறுப்பினர். 1963-ஆம் ஆண்டில் உணவு மற்றும் வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர். 1965-ஆம் ஆண்டில் மாநிலத் தொழில் வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்.

1962-1967, 1967-1971, 1971-1976 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர். 1963 முதல் 1964 வரை, மதிப்பீட்டுக்குழு உறுப்பினர். 1965 முதல் 1966 வரை சிறப்புரிமைக் குழு உறுப்பினர், 1980-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினர் என பல பொறுப்புகள், பதவிகளில் அழுத்தமாக முத்திரை பதித்தவர்.

தொகுதி மக்கள் தங்கள் பகுதி சார்ந்த கோரிக்கைகள், தேவைகளை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி, முருகையன் அவர்களுடைய முகவரிக்கு அனுப்பினால் போதும். அவ்வாறு தொகுதி மக்களிடம் இருந்து வரும் கடிதத்தைப் படித்து, அவற்றை துறைசார்ந்த நடவடிக்கைகளுக்கு அனுப்பித் தீர்த்து வைப்பார். "தன்னைச் சந்திப்பதற்காக யாரும் காத்திருக்க வேண்டாம், அலைய வேண்டாம்"எனக் கூறியவர். அதனால் அவருக்கு "போஸ்ட் கார்டு எம்.எல்.ஏ.' என்கிற பெயரும் இருந்தது என்கின்றனர்.

> **"தன்னை சந்திப்பதற்காக யாரும் காத்திருக்க வேண்டாம், அலைய வேண்டாம்"எனக் கூறியவர். அதனால் அவருக்கு "போஸ்ட் கார்டு எம்.எல்.ஏ.' என்கிற பெயரும் இருந்தது!**

அரசியல் செயல்பாடுகளுடன் பொதுச் சேவைகளிலும் ஆர்வம் கொண்டவர். 1970-ஆம் ஆண்டில் சண்முகா தொழிற்சாலை உயர்நிலைப்பள்ளியை திருவண்ணாமலை நகரில் நிறுவினார். 1980-ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்ந்த இந்தப் பள்ளிதான், திருவண்ணாமலை நகரில் கல்வி வளர்ச்சிக்குத் துணை நின்றது. அதேபோல, 1990-ஆம் ஆண்டில் அமராவதி முருகையன் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை நிறுவி வெற்றிகண்டவர். அந்த வகையில், முன்மாதிரி அரசியல்வாதியாகச் செயல்பட்டார்.

திருவண்ணாமலையில் மாவட்டக் கழகத்துக்குச் சொந்தமாக இடம் வாங்கி, அங்கு அலுவலகம் அமைத்துச் செயல்பட்ட முருகையன் அவர்கள், 2003-ஆம் ஆண்டில், தனது 83-வது வயதில் வயதுமூப்பு காரணமாக இயற்கை எய்தினார். கழகத்தினர் திரண்டு வந்து மரியாதை செய்தனர். 2021-ஆம் ஆண்டு அவரது நூற்றாண்டு விழாவை மாவட்டக் கழகம் சிறப்பாகக் கொண்டாடி, அவரது வரலாற்றை இளையோருக்கு எடுத்துச்சென்றது. அந்தப் பணி என்றும் தொடரும்.

...துடிக்கும்

## ஆர்.டி.ஐ. கேள்வியை முடக்கத் திட்டம்?

தேர்தல் பத்திரங்கள் மூலம் எந்தெந்த நிறுவனங்கள், எவ்வளவு நிதியை பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளுக்கு வழங்கின?

பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்பு... ரிசர்வ் வங்கியின் இயக்குநர்கள் குழுவிடம் ஆலோசிக்கப்பட்டதா?

பி.எம்.கேர் நிவாரண நிதி, ஒரு பொதுவான அமைப்பா? தனியார் அமைப்பா? -

இது போன்ற கேள்விகளுக்கு எல்லாம், ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து தெளிவாக எந்த பதிலும் இல்லை. அதாவது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி, கேள்விகள் எழுப்பிய பின்னரும், உரிய தரவுகளோ பதில்களோ இல்லை. இவை மறைக்கப்பட வேண்டிய தகவல்கள் இல்லை என்றாலும், இதுதொடர்பாக எழும் எந்தக் கேள்விக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் அளிப்பதில்லை. மாறாக, இப்போது கேள்வி எழுப்புவதற்கே அச்சம் கொண்டு, அந்தச் சட்டத்தையே முடக்குவதற்கான ஆலோசனைகளைத் தொடங்கிவிட்டனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை (RTI) மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது. குறிப்பாக, ரகசிய பணி அறிக்கைகள் தொடர்பான தகவல்களை, சாதாரண கோரிக்கைகளில் இருந்து, பாதுகாக்க வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 'முக்கியமான விஷயங்களில் ரகசியமாக விவாதிக்க முடியாவிட்டால், ஒரு அரசாங்கத்தை நடத்த முடியாது' என இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் குறிப்பிட்டதை, ஆய்வு அறிக்கை சுட்டிக் காட்டி இருக்கிறது.

இதன்மூலம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் பணிகளைத் தொடங்கியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

'நாட்டின் வேலையில்லா திண்டாட்டம்', 'பெரும் தொழிலதிபர்களின் வாரா கடன்கள் தள்ளுபடி' ஆகிய தகவல்கள் ஆர்.டி.ஐ. மூலம் வெளியாகி எதிர்க்கட்சிகள் நெருக்கடியை அளித்த நிலையில், இப்போது கேள்வி கேட்பதையே முடக்கத் திட்டமிட்டுள்ளனர். விமர்சனத்துக்கு அஞ்சுபவர்களுக்கு, வேறென்ன தெரியும், கேள்விகளை முடக்குவதைத் தவிர...

## ஃப்ளாஷ்பேக்



மா.நீதிராஜன்



### நடைபயணத்தில் பெயர் சூட்டிய தம்பி!

2005-ஆம் ஆண்டு, மதுரை தமுக்கம் மைதானத்தில், நடைபெற்ற தேர்தல் நிதியளிப்பு பொதுக்கூட்டத்துக்கு, நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது, நான் கழகத் தொண்டர் அணியில் பணிபுரிந்தேன். 'சங்கம்' ஓட்டலில் தங்கியிருந்த தலைவர் அவர்களை, அப்போதைய மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் அண்ணன் வ.வேலுசாமி அவர்கள் மூலம் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை அறிமுகம் செய்கையில், 'திருச்செந்தூர் நீதி கேட்டு நெடும்பயணத்தின்போது, நீதிராஜன் என நீங்கள் பெயர் சூட்டிய தம்பி' என அறிமுகம் செய்து வைத்தார். தலைவர் மகிழ்ச்சியடைந்து, வாழ்த்து தெரிவித்தார்.

**- மா.நீதிராஜன், தொண்டர் அணித் தலைவர், மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அறிஞர் அண்ணா சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்வு!

1967-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கழகம் 137 இடங்களை வென்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்புக்கான சட்டமன்ற கட்சித்தலைவராகக் கழக சட்டமன்ற உறுப்பினர்களால் 28-02-1967-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.